**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.2/2021***
**2024-ம் ஆண்டு ஜீன் மாதம் 24-ம் நாள் திங்கட்கிழமை**

வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செபஸ்தியம்மாள் | சாதி | : |
| க-பெ | : வேதமுத்து | சமயம் | : |
| கிராமம் | : உசிலைக்கண்மாய் | தொழில் | : |
| வட்டம் | : காளையார்கோவில் | வயது | : |

## வா.சா.1 செபஸ்தியம்மாள் ஆஜர்.

நான் இந்த வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பில் 1வது சாட்சியாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் தரப்பில் பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. வம்சாவழி ஜாபிதா அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. தாவா 1 முதல் 3 வரை லக்க சொத்துக்களின் கணினி பட்டா எண்.19 அந்தோணி பெயரில் இருந்து வந்ததற்குரிய கணினிபட்டா இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 2ம் வாதி பெயருக்கு 1 முதல் 3 இலக்க சொத்துக்கு 2ம் பிரதிவாதி பெயரில் மானாமதுரை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஏற்பட்ட கணினி பட்டா எண்.1444 இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 18.11.2020ம் தேதிய 2வது இலக்க சொத்தை பொறுத்து இவ்வழக்கில் கண்ட 5, 6, 7 பிரதிவாதிகள் மானாமதுரை சார்பதிவகம் ஆவண எண்.1/3500/2020 என்ற எண்ணில் தங்களுக்குரிய பிரிவினை இல்லாத பாகத்தை பொறுத்து பாகபாத்திய விடுதலைப் பத்திரம் ஒன்றை குடும்ப உறுப்பினருக்கென குறிப்பிட்டு 3, 4ம் பிரதிவாதிகளுக்கு பதிவு செய்து கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் சார்பதிவக இணையதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Taken down by me in open court
readover/interpreted to the witness
in Tamil and acknowledged by
him/her to be correct.

District Munsif,
Manamadurai.